**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்**

**OS.No.393/2018**

திரு. கருப்புசாமி (P.W.–1 ) **28.11.2022.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். நான் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எப்போதும் என் கையில் ரூ. 4 முதல் ரூ. 5 லட்சம் பணம் ரொக்கமாக இருக்கும். 2016 ல் ரூ. 5 லட்சம் பணம் என் கையில் ரொக்கமாக இருந்தது. நான் வருமான வரி இதுவரை செலுத்தவில்லை. 2016 ல் ரூ. 3 லட்சம் பணம் பிரதிவாதிக்கு கொடுத்ததற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது. அந்த ஆதாரத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கேட்டுக்கொண்டதால் கிரைய ஒப்பந்தம் 25 மாத காலக்கெடு வைத்து போடப்பட்டது. ஒப்பந்தப்படி பிரதிவாதி ரூ.1 லட்சம் பணம் கொடுக்க வேண்டியுள்ளது. பொதுவாக கிரையம் பெறுபவர்கள் தான் கால அவகாசம் கேட்பார்கள் என்றாலும் ஆனால் இந்த வழக்கில் நான் கால அவகாசம் கேட்டேன் என்றால் பிரதிவாதி கேட்டுக்கொண்டதால் கால அவகாசம் போடப்பட்டது. கிரைய ஒப்பந்த காலத்தில் என்னிடம் ரூ. 5 லட்சம் பணம் கையில் இருந்தபோது ஏன் உடனே கிரையம் செய்து கொள்ளவில்லை என்றால் பிரதிவாதி கேட்டுக்கொண்டதால் கால அவகாசம் கொடுக்கப்பட்டது. நான் சொன்னது போல கிரைய ஒப்பந்தம் தாவாச்சொத்தை விற்பதற்காக போடப்பட்டது என்றாலும் ரூ. 3 லட்சம் பிரதிவாதி கடன் தான் கேட்டார் என்றாலும் அவ்வாறு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டதால் தான் கடன் தருவதாக நான் கூறியதால் தான் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றாலும் சரியல்ல. 04.03.2015 ல் பிரதிவாதி கிரையம் பெற்ற வீட்டுமனையை 04.02.2016 ல் பிரதிவாதி எனக்கு விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எழுத படிக்கத்தெரியாது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. **வா.சா.ஆ 1 ல்** யார் யார் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் என்பது எனக்குத் தெரியும். **வா.சா.ஆ 1 ல்** விஜயா, செந்தில்ராஜ் ஆகியோர் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள். **வா.சா.ஆ 1 ல்** சாட்சியாக கையொப்பம் செய்த விஜயா என்பவர் என்னுடைய அலுவலகத்தில் வேலை செய்கிறார் என்றால் சரியல்ல. நான் விவசாயம் தான் செய்து வருகிறேன். எனக்கு அலுவலகம் இல்லை. நான் திருப்பூர், செங்கப்பள்ளி கிராமத்தில் குடியிருக்கிறேன். நான்

குடியிருக்கும் வீட்டிற்கும் தாவாச்சொத்திற்கும் சுமார் 7 கி.மீ. தூரம் இருக்கும். நான் ஒப்பந்தம் போடும் போது தாவாச்சொத்தின் மதிப்பு ரூ. 10 லட்சம் இருக்கும் என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் வீடு கட்டுவதற்காக வாங்கி வைத்திருந்த இடத்தை ஒரு போதும் எனக்கு விற்பனை செய்ய தயாராக இருந்தது இல்லை என்றால் சரியல்ல. எனக்கு இது போன்ற வழக்குகள் அவினாசி, ஊத்துக்குளி ஆகிய நீதிமன்றங்களில் வழககுகள் இருந்தது என்றால் சரியல்ல. இது தான் முதல் வழக்கு ஆகும். **வா.சா.ஆ 1** ஐ நான் தான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. அவிநாசியில் உள்ள பத்திர எழுத்தர் தயாரித்தார். பிரதிவாதியிடம் அடமான ஒப்பந்தம் போடத்தான் பதிவு அலுவலகத்திற்கு பிரதிவாதியை அழைத்துச்சென்றேன் என்றால் சரியல்ல. **வா.சா.ஆ 1** எப்பொழுது தயார் செய்யப்பட்ட தேதி இல்லை என்றால் சரிதான். ஆனால் எப்பொழுது பதிவு செய்யப்பட்டது என்ற தேதி உள்ளது. தாவாச்சொத்தை கிரையம் பெற வில்லங்கம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. பார்த்தோம் ஆனால் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த வில்லங்கமும் போட்டு பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாவாச்சொத்தை கிரையம் பெறுவதற்கு வழக்கறிஞர் கருத்துரை வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் கருத்துரை வாங்கினேன். நான் பார்த்த வில்லங்கத்தையும், வழக்கறிஞரின் கருத்துரையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும். **வா.சா.ஆ 1** ல் சாட்சியாக கையொப்பம் செய்தவர்கள் தாவாச்சொத்தை என்னிடம் காட்டினார்கள் என்ற விவரத்தை வழக்குரையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரையில் ஒப்பந்தப்படி கிரையம் ஏன் நடைபெறவில்லை என்பதற்கு காரணம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையத்திற்கு அழைத்தேன் பிரதிவாதி தான் வரவில்லை. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தாவாச்சொத்தை நான் வாங்குவதற்கு தயாராக இருந்தேன் என்பதற்கு வழக்கறிஞர் அறிவிப்பைத்தவிர ஆதாரம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் பிரதிவாதி வட்டிக்கு வாங்கிய ரூ. 3 லட்சம் பணத்தை திருப்பி சரியான நேரத்தில் கொடுக்காததால்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. **வா.சா.ஆ 1 ல்** 2 லக்கமிட்டவர் பாக்கித் தொகை ரூ. 1 லட்சத்தை 1 லக்கமிட்டவரிடம் கொடுத்து பின்னர் கிரையம் கொடுக்கவில்லை என்றால் நீதிமன்றம் மூலம் கிரையம் பெற்றுக் கொள்ள சம்மதிக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அதன்படி பாக்கி பணம் ரூ. 1 லட்சத்தை பணமாகவோ அல்லது காசோலையாகவோ நான் பிரதிவாதியிடம் கொடுத்து கிரையத்திற்கு அழைத்ததற்கு ஆதாரம் இல்லை என்றால் சரிதான். பதிவு அலுவலகத்தில் இருந்து மீதி கிரையத்தொகையை வைத்துக்கொண்டு பத்திர பதிவிற்கு தயாராக இருப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே போல கிரையம் செய்வதற்கு முத்திரைத்தாள் வாங்கி தயாராக இருந்ததற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். **வா.சா.ஆ 1** ன் படி மீதித் தொகை ரூ. 1 லட்சத்தை கொடுத்த பிறகு தான் கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று உள்ளது அதன்படி மீதித் தொகையை கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து உள்ள லே அவுட்டில் தற்பொழுதும் 100 வீட்டு மனைகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவாச்சொத்தைத் தவிர வேறு இடம் அந்த இடத்தில் கிடைத்தால் கிரையம் பெறுவேனா என்றால் தாவாச்சொத்திற்குத்தான் ஒப்பந்தம் போட்டுள்ளேன். தாவாச்சொத்தின் மதிப்பு தற்போது மிக அதிகமாக ஆனதால் பணத்தை பிரதிவாதி கொடுக்க தயாராக இருந்தும் இடத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

(ஒம்) P.செல்லதுரை
முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.

Compared with original and uploaded by Typist, PSJ Court, Tiruppur